ஆனால் பரிசுத்தமாக்கப்பட்ட,
தேவனுக்கு பிரதிஷ்டை
செய்யப்பட்ட பரிசுத்த ஜீவியத்தை
பிசாசு காணும் பொழுது, அதுவே
அவனை மிகவும் பாதிக்கிறது.
அவனைக் குறித்து யார் எது
சொன்னாலும், அவனை
எப்படியெல்லாமோ இழிவாக
சொன்னாலும், அதைப்பற்றி
சலனம் அடையாமல் அவன்
எவ்வளவு இனிமையாக
இருக்கமுடியுமோ அவ்வளவாய்
இனிமையாய் இருந்து,
தேக்கமடையாமல், தொடர்ந்து
நல்வழியில் முன்னேறிச்
செல்லுகிறான். ஓ அவ்விதமான
ஜீவியமானது, பிசாசை தூக்கி
யெறிந்துவிடும்;
பிசாசை அசைக்கும்
இடி முழக்கம்
அதுவே

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

---

## செய்தி: இரக்கத்தின் சிங்காசனமும் நியாயத்தீர்ப்பின் சிங்காசனமும்,

## ஜனவரி 8, 1961, இந்தியானா, அமெரிக்கா

---

116. “சிங்காசனத்தின் சத்தம்” என்பதை இப்பொழுது பார்ப்போம். இந்த சிங்காசனத்தை கவனியுங்கள். “சிங்காசனத்திற்கு முன்பாக ஏழு நட்சத்திரங்கள்” நட்சத்திரங்களின் சத்தம். “சத்தங்கள்” என்பதைக் கவனியுங்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத்தில் அல்லது 5ம் அதிகாரத்தில் இங்கே நாம் காண்பது என்னவெனில், “அந்தச் சிங்காசனத்திருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன” ஒரு சத்தம் அல்ல அது, “சத்தங்கள்” என்று பன்மையில் கூறப்பட்டுள்ளது.

அது என்ன? தேவன் சபையிடம் ஏழு ஆவிகள் மூலமாக தன்னையே பிரதிபலித்து காண்பித்துக்கொண்டு, பேசிக் கொண்டிருக்கிறார்.

**தேவனுடைய உண்மையான அபிஷேகம் பெற்றவர் பேசும்போது, அதுவே தேவனுடைய சத்தமாயிருக்கிறது.**

அதைப் புறக்கணிப்பதானது, அந்த குத்துவிளக்கை அகற்றிவிடுவதாகும். பார்த்தீர்களா?

"சத்தங்கள்", ஏழு சபைக் காலங்களின் சத்தம் (இந்த மூலையில்) சத்தங்கள் இடிமுழக்கத்துடனும், மின்னலுடனும் பேசிக் கொண்டிருக்கின்றன.

117. இந்நாட்களில் இவ்வாறு அவர்கள் கூறுகிறார்கள்: "நல்லது, பிரசங்க பீடத்திலிருந்து 'நரகம்' என்ற சொல்லை உபயோகிப்பதை நாங்கள் விசுவாசிக்கவில்லை" என்கின்றனர். ஓ இரக்கம் வேண்டும். ஊ! **தேவனுடைய வார்த்தையை அடக்கி வைக்காத தேவ மனிதனே நமக்குத் தேவை.**

118. **யாவருமே ஒரு பிரசங்கியாக முடியாது, ஆனால் உங்களுக்கு ஒரு சத்தம் உண்டு.** ஜனங்களுக்கு ஒரு பிரசங்கத்தை உங்களால் பிரசங்கிக்க முடியவில்லையெனில்....

நீங்கள் ஒரு பிரசங்கியாயிருந்தால், பிரசங்க பீடத்திலிருந்து பிரசங்கிக்க அழைக்கப்பட்டுள் ளீர்கள். **அவ்வாறு அழைக்கப்படவில்லையெனில், அப்படி யிருந்தும் ஜனங்களுக்கு முன்னால், உங்கள் வாழ்க்கையே ஒரு பிரசங்கமாக அமைய வேண்டும், அதன்மூலம் நீங்களும் ஒரு பிரசங்கியாகத்தான் இருப்பீர்கள்.**

**உங்களுடைய பிரசங்கமானது உங்களால் வாழ்ந்துகாட்டப்படட்டும், அவ்வாறு செய்தால், அதுவே தேவனுடைய சத்தமாக இருக்கிறது, அதை புறக்கணிக்கிறவர்கள் மேல் அது நிந்தையைக் கொண்டுவரும்.**

அவர்கள் கூறுவார்கள்: "அவன் அல்லது அவளுடைய ஜீவியத்திற்கெதிராக ஒருவரும் குற்றஞ்சுமத்த முடியாது. அவர்கள் இனிமை யானவர்கள், வாழ்ந்து காட்டுகிறார்கள். தேவனுடைய மனிதன் என்று சொல்லும்படி யாராவது ஜீவித்திருக்கிறார்களெனில், அது அந்த மனிதன்தான் அல்லது அந்த பெண்மணிதான்" என்பார்கள்.

**பாருங்கள், நீங்கள் பிரசங்கத்தை வாழ்ந்து காட்டுங்கள், அதுவே உங்கள் பிரசங்கமாக இருக்கட்டும்.**

**நீங்கள் அவர்களுக்கு ஒரு பிரசங்கியாக இருக்கும்படி அழைக்கப்படாவிடில், பிரசங்கியா வதற்கு முயற்சிக்கவேண்டாம்.**

நீங்கள் அவ்வாறு செய்யாவிடில், எல்லாவற்றையும் போட்டு குழப்பி, குழப்பம் உண்டாக்கி, மக்களை நீங்கள் சிக்கலில் மாட்டி வைத்து, என்ன நடக்கிறதென்பதையே நீங்கள் கெடுத்து, உங்களையும்கூட கெடுத்துக் கொண்டுவிடுவீர்கள்.

**எனவே உங்கள் பிரசங்கத்தை வாழ்ந்து காட்டுங்கள்.**

119. **பிரசங்கியானவன் தன்னுடைய பிரசங்கத்தை பிரசங்கிக்க அழைக்கப் பட்டிருப்பதோடு, அதை தன்னுடைய வாழ்க்கையில் வாழ்ந்துகாட்டவும்கூட அழைக்கப்பட்டுள்ளான்.**

**உங்களால் பிரசங்கத்தின்படி வாழ்ந்துகாட்ட இயலாவிடில், நீங்கள் பிரசங்கப்பதையே நிறுத்தி விடுங்கள்.**

**ஆனால் நீங்கள் செய்கிற பிரசங்கத்தின் படியெல்லாம் வாழ்ந்துகாட்டவேண்டும் என்று உங்களைப் பற்றி எதிர்பார்க்கப்படுகிறது.**

120. நல்லது, இங்கே "சத்தங்கள்" இருந்தன. ஓ! ஜெபர்சன்வில்லில் வாழ்ந்துகாட்டுகிற சத்தங்கள் ஆயிரக்கணக்கில் வேண்டுமென்று எவ்வளவாய் வாஞ்சிக்கிறோம்!

தேவனுடைய இடறுமுழக்கமாக இருந்து, இன்றைக்கு பூமியில் கறை திரையின்றி, இனிமையிலும் பரிசுத்தத்திலும், தூய்மையிலும், கறைபடாத ஜீவியங்களிலும் நடந்து தேவனுடைய இடிமுழக்கத்தை முழங்கித் திரிபவர்களாக அவர்கள் இருப்பார்கள்.

ஆம், ஐயா, உண்மையான கிறிஸ்தவர்கள், சத்துருவுக்கு எதிராக இடிமுழக்கமாக இருக்கிறார்கள்.

நீங்கள் எவ்வளவாய் கத்துகிறீர்கள் என்பதைக் குறித்து பிசாசு அக்கறைப் படுகிறதில்லை; அல்லது எவ்வளவாய் உங்களால் குதிக்கமுடிகிறது, அல்லது எவ்வளவு உரத்த சத்தமாய் கத்துகிறீர்கள் என்பதைப் பற்றி பிசாசு கவனிக்கிறதில்லை.

ஆனால் பரிசுத்தமாக்கப்பட்ட, தேவனுக்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட

**பரிசுத்த ஜீவியத்தை பிசாசு காணும் பொழுது, அதுவே அவனை மிகவும் பாதிக்கிறது.**

**அவனைக் குறித்து யார் எது சொன்னாலும், அவனை எப்படியெல்லாமோ இழிவாக சொன்னாலும், அதைப்பற்றி சலனம் அடையாமல் அவன் எவ்வளவு இனிமையாக இருக்கமுடியுமோ அவ்வளவாய் இனிமையாய் இருந்து, தேக்கமடையாமல், தொடர்ந்து நல்வழியில் முன்னேறிச் செல்லுகிறான்.**

**ஓ அவ்விதமான ஜீவியமானது, பிசாசை தூக்கியெறிந்துவிடும்; பிசாசை அசைக்கும் இடி முழக்கம் அதுவே.**

121. அவரால் பில்லிகிரகாமைப் போலவோ, அல்லது ஓரல் ராபர்ட்ஸைப் போலவோ அல்லது மகத்தான புகழ்மிக்க ஒரு பேச்சாளரைப் போலவோ பிரசங்கிக்க

முடிந்தால், அவருக்கு அது இப்படியாக இருக்குமே” என்று கூறுகிறீர்கள். ஓ, இல்லை!

**சில வேளைகளில் பிசாசானவன் அதைப்பார்த்து நகைக்கிறான்.** ஒன்றுமற்ற ஒன்றைப்போல அதைப்பற்றி அவன் கவனம் செலுத்துகிறதில்லை. வேத தத்துவமெல்லாம் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள், எல்லாவித வேதக்கல்லூரியின் பயிற்சியும் பெற்றிருக்கிறீர்கள்;

**பிசாசானவன் பின்னால் உட்கார்ந்து கொண்டு அதைப்பார்த்து நகைக்கிறான். ஆனால் அவன் ஜீவனுள்ள ஒன்றை காணும்போதோ!**

122. அன்றைக்கு இருந்த சீஷர்களைப் பாருங்கள். சந்திரரோகியாயிருந்த சிறுவனிடத்திலிருந்து பிசாசைத் துரத்த, “பிசாசே, அவனைவிட்டு வெளியே வா, அவனைவிட்டு வெளியே வா, அவனைவிட்டு வெளியே வா” என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

123. அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த பிசாசானவன், "நீங்கள் உங்களையே வெட்கத்திற்குட்படுத்திக் கொண்டிருக்கவில்லையா? என்னைத் துரத்துங்கள் என்று இயேசுவானவர் உங்களுக்கு கட்டளை கொடுத்தார். ஆனால் உங்களில் ஒருவரால்கூட என்னைத் துரத்த முடியாது" என்று சீஷர்களிடம் கூறியிருப்பான்.

124. ஆனால் சகோதரனே, அவன் இயேசு வருவதைக் கண்ட போது; அவர் அமைதியாக நடந்துவந்தார். ஊ ஊ ஓ! அவர் ஒன்றும் சொல்லத் தேவையாயிருக்கவில்லை.

ஏற்கனவே பிசாசு அவரைக் கண்டு பயந்து போயிருந்தான். அவன் அந்தப் பிள்ளையைவிட்டு வெளியேறியாக வேண்டும் என்பதை அறிந்திருந்தான்; ஏனெனில், ஜீவனுள்ளவர் அங்கே வந்து விட்டார், அவர் வெறும் ஒரு பிரசங்கமாக மட்டுமல்ல, ஆனால் அவர் ஜீவனாகவும் இருக்கிறார். அவர், "அவனைவிட்டு வெளியே வா" என்று கூறினார். ஓ, என்னே! அதுவே

போதுமாயிருந்தது. **அமைதியாக அவர் பேசினார். அவர், தான் என்ன பேசுகிறோம் என்பதை அறிந்திருந்தார். அவர், தான் என்ன செய்கிறோம் என்பதை அறிந்திருந்தார்.**

★★★★★